# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2017 -2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:..........................................................................    நேரம்: 150 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. அரங்கேற்றுக்காதையில் விரிவாகக் கூறப்பட்ட கலை

_______________________ .

( ஓவியம், நாடகம், நடனம் )

2. நரசிம்மபல்லவன் ____________________ என்றும்

அழைக்கப்பட்டான்.

( வர்மன், மாமல்லன், கரிகாலன்)

3. மல்லிகைப் பூ ____________________ என்று மணம் வீசியது.

( கடகட, கமகம, கலகல)

4. நவில்தல் என்பது ____________________ .

( கற்றல், சிரித்தல், நீக்குதல் )

5. நூல்களைத் திரித்து ஆடைகளை நெய்பவர்

____________________ .

( உழவர், நெசவாளர், குயவர் )

6. சிறுவர்கள் கடலில் ____________________ விளையாடினர்.

( ஓடி, நடந்து, நீந்தி )

7. தீயோரின் நட்பு எமக்குத் ____________________ த் தரும் .

( இன்பத்தை, துன்பத்தை, மகிழ்ச்சியை )

8. ''மாடலன் எமது விருந்தினன்'' எனக் கூறியவன்

____________________ .

( செங்குட்டுவன், கணிகன், இளங்கோ )

9. வாழை + தோட்டம் என்பதைச் சேர்த்து எழுதினால் ______________ .

( வாழைத்தோட்டம், வாழைதோட்டம், வாழைய்தோட்டம் )

10. உழவுத்தொழில் ______________ நிலத்திற்குரிய தொழிலாகும்.

( முல்லை, குறிஞ்சி, மருத )

11. வளவன் ______________ பாம்பைக் கண்டு நடுங்கினான்.

( முழங்கிய, கத்திய, சீறிய )

12. அன்னை தெரேசா துன்புற்ற மக்களுக்குப் ______________ செய்தார்.

( பனி, பணி, பநி )

13. கதிரவனைப் போற்றி நன்றி கூறும் நாள் ______________ .

( தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், ஆடிப்பிறப்பு )

14. தஞ்சைப் பெருங்கோவிலைக் கட்டிய மன்னன் ______________ .

( மாமல்லன், நரசிம்மபல்லவன், அருண்மொழித்தேவன் )

15. நேற்று நடந்த ஆண்டுவிழாவில் தமிழரசி நடனம் ______________ .

( ஆடுவாள், ஆடுகிறாள், ஆடினாள் )

16. “உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை....”எனக் கூறும் நூல் ________________.

( தொல்காப்பியம், நல்வழி, சிலப்பதிகாரம் )

17. கலைகளிலே அவள் ஓவியம் எனப் பாடியவர் ________________ .

( இளங்கோவடிகள், கண்ணதாசன், ஔவையார் )

18. காவியன் பூங்காவிற்குச் சென்று ________________ சறுக்கினான் .

( ஆடுபலகையில், ஊஞ்சலில், சறுக்கியில் )

19. குறிஞ்சி நிலத்தின் தெய்வம் ________________ .

( முருகன், இந்திரன், வருணன் )

20 விவிலிய நூலை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தவர் ________________ .

( தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், சுப்பிரமணியதேசிகர் )

21. பார்கவி பூக்களைக் ________________ மாலை கட்டினாள்.

( நெய்து, வைய்து, கொய்து )

22. ஆடற்குல ஆண்கள் ________________ .

( விறலியர், கூத்தர், பாணர் )

23. பாவலன் சிற்பம் ________________ .

( வரைந்தான், கட்டினான், செதுக்கினான் )

24. காகம் மரத்தில் இருந்து கா கா என்று ________________ .

( கரைந்தது, அகவியது, கூவியது )

25. ஈரூடக உயிரிகள் ________________.

( மீனும் நண்டும், இறாலும் சுறாவும், முதலையும் ஆமையும்)

26. ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும்; உருவங்கள் பலவும் தாங்கி நிற்கும்; உச்சியில் குடம் தரித்திருக்கும். அது ________________ .

( கோபுரம், கதிரவன், குடை )

27. ________________ விளையாட்டுப் போட்டியில் விரைவாக ஓடினாய்.

( நான், நீ, நீங்கள் )

28. தமிழர் தாம் வாழ்ந்த நிலங்களை ________________ வகுத்தனர்.

( மூன்றாக, நான்காக, ஆறாக )

29. எம்மண்ணின் பெருமைக்குரிய மரம் ________________ .

( மா, வேம்பு, வாகை )

30. ஒன்று திரண்டால் வலிமை பெறும் கொடி ________________ .

(அடம்பன்கொடி, மல்லிகைக்கொடி, முல்லைக்கொடி )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. நாம் ________________ மதிக்க வேண்டும். ( பெற்றோர் )

2. விளைந்த நெல் ________________ அறுவடை செய்யப்பட்டது. ( உழவர் )

3. அம்மா ________________ உணவு கொடுத்தார். ( பிள்ளை)

4. இலையுதிர்காலத்தில் ________________ இலைகள் உதிர்கின்றன. ( மரம் )

5. நாவரசன் ஏற்றிய பட்டம் ________________ பறக்கின்றது. ( வானம் )

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. உணவுப் பொருட்கள் விளைவதற்கு மூல கரணியமாக விளங்குவது எது?

2. காடும் காடுசார்ந்த நிலம் எது? அந்நில மக்களை எவ்வாறு அழைப்பர்?

3. பழந்தமிழர் கட்டிடக் கலைகளில் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சான்றாக அமையும் கோயில் எது?

4. பொங்கலன்று சிறந்து நிற்கும் தமிழர் பண்பாடு எது?

5. ‘‘இன்றே என் அரண்மனை வாழ்வைத் துறக்கிறேன்’’ என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

6. ஆடற்கலையின் இருபெரும் பிரிவுகளும் எவை?

7. ‘இலக்கணச் சுருக்கம்’ என்ற நூலை எழுதியவர் யார்?

புள்ளிகள் 10

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து, கவிதையை நிரப்புக.**

## பிடிக்கும்

| | | |
|---|---|---|
| கட்டி | நீரில் | கேட்க |
| பார்க்க | நேரத்தில் | |

*மலையின் உச்சியைத் தொடுவது பிடிக்கும்*

*மாலைக் கதிரவனைப்______________ப் பிடிக்கும்*

*குயிலின் குரலைக் ______________ ப் பிடிக்கும்*

*கூடியிருந்து உண்ணப் பிடிக்கும்*

*மாலை ______________ நடப்பது பிடிக்கும்*

*மணல்வீடு ______________விளையாடப் பிடிக்கும்*

*குளிர்ந்த ______________குளிப்பது பிடிக்கும்*

*சேர்ந்து வாழ என்றுமே பிடிக்கும்*

புள்ளிகள் 10

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| அழிவில்லாதது | கொடுக்க | நாட்டில் |
| வள்ளுவர் | கல்வி | |

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அதனால் தான் ________________ 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் ________________ என்பதே இதன் பொருள். கல்வி ________________ ; என்றும் நிலைத்து நிற்கக் கூடியது. ஆனால், பிற செல்வங்கள் அழிந்து விடக் கூடியன. அவை பிறருக்குக் கொடுக்கக் குறைந்து கொண்டே போகும். ஆனால், கல்விச் செல்வம் ________________க் கொடுக்கக் கூடுமே அன்றிக் குறையாது. இத்தகைய சிறப்புடைய கல்வியைக் கற்றோரும் சிறப்புடையவரே. அதனால்தான் மன்னனுக்குத் தன் ________________ மட்டும்தான் சிறப்பு. கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறப்படுகின்றது.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மாந்த உணர்வுகளின் வெளிப்பாடே கலைகளாகும். ஊர்ப்புற மக்களின் வாழ்க்கையோடு இணைந்த கலைகள் நாட்டுப்புறக்கலைகள் எனப்படும். நாட்டுப்புறக்கலைகள் மிக எளிமையானவை. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழே இக்கலைகளுக்கு அடிப்படையாக அமைந்தது. தெருக்கூத்து, கரகாட்டம், காவடியாட்டம், கும்மி, கோலாட்டம் போன்றவையும் நாட்டுப்புறக்கலைகளே. மயில் தோகை விரித்து ஆலுவதைக் கண்டு மக்களும் ஆடினர். இதிலிருந்து மயிலாட்டம் பிறந்தது. மழைபெய்யும் போதும், மணவிழா, அறுவடைவிழா போன்றவற்றைக் கொண்டாடும்போதும் மக்கள் நடனம் ஆடினர்.

1. ஊர்ப்புற மக்களின் வாழ்க்கையோடு இணைந்த கலைகள் எவை?

________________________________________

2. நாட்டுப்புறக் கலைகளுக்கு அடிப்படையாக அமைந்தது எது?

________________________________________

3. நாட்டுப்புறக் கலைகள் இரண்டைத் தருக.

________________________________________

4. மயில் தோகை விரித்து ஆலுவதிலிருந்து பிறந்த ஆட்டம் எது ?

________________________________________

5. மக்கள் எவ்வெப்போது நடனம் ஆடினர் ?

________________________________________

புள்ளிகள் 10

7) **பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

வளவன் வீட்டின் அருகே ஒரு சிறிய தோட்டம் உள்ளது. அங்கு காய்கறிச் செடிகளும் பழமரங்களும் காணப்படுகின்றன. பறவைகள் மரங்களில் உள்ள பழங்களைக் கொத்தித் தின்கின்றன. வளவன் வளர்க்கும் முயல்கள் மரங்களுக்கு இடையில் பாய்ந்து ஓடுகின்றன. அவன் அதைப் பார்த்து மகிழ்ந்தான்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

8) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✶ இளங்கோ அடிகள்

✶ தைப்பொங்கல்

✶ காலங்கள்
  - காலங்களின் பெயர்கள்.
  - நீர் விரும்பும் காலம் எது? ஏன்?
  - இக்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள்.
  - விளையாடப்படும் விளையாட்டுகள்.

புள்ளிகள் 15